டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in




agridoctor.in | 7.7.2024 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 018 - Madurai | Online Edition

# ஊட்டச்சத்து தகவல்களை பெரிய எழுத்துகளில் தெரியப்படுத்தும் திட்டத்திற்கு FSSIA ஒப்புதல்

புது தில்லி, ஜூலை 6

பேக்கிங் செய்யப்பட்ட உணவுப் பொருட்களில், மொத்த சர்க்கரை, உப்பு மற்றும் நிறைவுற்ற கொழுப்பு தொடர்பான ஊட்டச்சத்து தகவல்களை பெரிய எழுத்துக்களில் காட்சிப்படுத்தும் திட்டத்திற்கு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் (எஃப்எஸ் எஸ்ஏஐ - FSSAI) ஒப்புதல் அளித்துள்ளது.

ஊட்டச்சத்து தகவல் தொடர்பாக உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலை விதிமுறைகள்-2020-ல் திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்கும் இந்த முடிவு உணவு ஆணையத்தின் 44-வது கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இக்கூட்டம் எஃப்எஸ்எஸ்ஏஐ தலைவர் அபூர்வா சந்திரா தலைமையில் நடைபெற்றது. நுகர்வோர் தாங்கள் உட்கொள்ளும் உணவின் ஊட்டச்சத்து மதிப்பை நன்கு புரிந்து கொள்வதற்கும் அதற்கேற்ப முடிவுகளை எடுப்பதற்கும் அதிகாரம் அளிப்பதை இந்த திருத்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த திருத்தத்திற்கான வரைவு அறிவிக்கை இப்போது பொது களத்தில் வைக்கப்படும். அதன் மீது ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் வரவேற்கப்படும்.

ஆரோக்கியமான தேர்வுகளை மேற்கொள்ள நுகர்வோருக்கு அதிகாரம் அளிப்பதுடன், தொற்றா நோய்களை எதிர்த்துப் போராடு வதற்கும், பொது சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்து வதற்கும் இந்த திருத்தம் பங்களிக்கும்.

சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம், வர்த்தக அமைச்சகம், நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் உணவு அமைச்சகம், சட்டம் அமைச்சகம், குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகம் ஆகியவற்றின் மூத்த அதிகாரிகளும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் அதிகாரிகளும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். தொழில் சங்கங்கள், நுகர்வோர் அமைப்புகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# தென்னை மற்றும் பழத்தோட்டங்களில் பசுந்தீவனப்பயிரை வளர்க்க விரும்பும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

## கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தகவல்

கிருஷ்ணகிரி, ஜூலை 6

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்னை மற்றும் பழத்தோட்டங்களில் பசுந்தீவனப்பயிரை வளர்க்க விரும்பும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் சரயு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கால்நடைகளுக்கு தரமான பசுந்தீவனத்தை வழங்கவும், விவசாயிகளிடையே பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்கவும் வேளாண் மானியக் கோரிக்கையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரால் 2024&25ம் ஆண்டில் ஒருங்கிணைந்த தீவன மேம்பாட்டு இயக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தீவன மேம்பாட்டு இயக்கம் 2024&25ன் கீழ், பசுந்தீவன உற்பத்தியினை அதிகரிக்க 275 ஏக்கர் பரப்பளவில் தென்னை மற்றும் பழத்தோட்டங்களில் பசுந்தீவனப்பயிரை ஊடுபயிராகப் பயிரிட இலக்கு நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. தென்னை மற்றும் பழத் தோட்டங்களில் பசுந்தீவனப்பயிரை வளர்க்க விரும்பும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையாக ஏக்கருக்கு ரூ.3,000 வீதம் 275 ஏக்கருக்கு ரூ.8 லட்சத்து 25 ஆயிரம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

பசுந்தீவனப்பயிரை வளர்க்க விரும்பும் விவசாயிகள் குறைந்த பட்சம் 0.50 ஏக்கர் முதல் அதிகபட்சம் 2.5 ஏக்கர் பரப்பளவில் நீர் வசதியுடன் பசுந்தீவனத்தை பயிரிட்டு தொடர்ந்து மூன்று ஆண்டுகளாவது பராமரிக்க வேண்டும். சிறு, குறு விவசாயிகள், பெண் விவசாயிகள், எஸ்சி., எஸ்.டி விவசாயிகளுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்களது கிராமத்திற்கு அருகில் உள்ள கால்நடை மருந்தக, கால்நடை உதவி மருத்துவரை அணுகி, ஆதார் அட்டை நகல், பசுந்தீவனம் பயிரிடப்படும் நிலத்திற்கான சிட்டா, அடங்கல், வங்கி புத்தகம் மற்றும் 3 வருடத்திற்கு பசுந்தீவன பயிரை பராமரிப்பதற்கான உறுதிமொழி ஆகிய சான்றிதழ்களுடன் விண்ணப்பம் அளிக்க வேண்டும். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் ஆட்சியர் சரயு தெரிவித்துள்ளார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# குறுவை நெல் பயிர் காப்பீடு செய்ய ஜூலை 31 கடைசி நாள்

## வேளாண் உதவி இயக்குனர் அறிவிப்பு



தஞ்சாவூர், ஜூலை 6 புதுப்பிக்கப்பட்ட பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் நிகழாண்டு சாரீஸ் குறுவை பருவ நெல்பயிருக்கு காப்பீடு செய்ய ஜூலை 31ஆம் தேதி கடைசி நாள் ஆகும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பயிர் காப்பீட்டு திட்டத்தை செயல் படுத்துவதற்காக தஞ்சாவூர் ஒன்று தொகுதிக்கு உட்பட்ட மதுக்கூர் மற்றும் பட்டுக்கோட்டை வட்டாரங்களுக்கு சீமா பொது காப்பீட்டு நிறுவனம் முதல் ஆண்டு தேர்வு செய்யப்பட்டுள்ளது. இங்கிலாந்து கேரிப் சிறப்பு பருவத்தில் நெல்பயிருக்கு பயிர் காப்பீடு தொகை ஏக்கருக்கு ரூபாய் 36500. விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமிய தொகை ரூபாய் 730. காப்பீடு செய்ய கடைசி தேதி ஜூலை 31 என உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடன் பெறும் மற்றும் கடன் பெறாத விவசாயிகள் அனைவரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவோ அல்லது பொது சேவை மையங்கள் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

விவசாயிகள் திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது முன்மொழிவு விண்ணப்பத்துடன் பதிவு விண்ணப்பம் கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல் சான்று பசலி 1434 வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க ஒலி நகல் ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து காப்பீடு செய்து கொள்ளலாம். குறுவை நெல் பயிருக்கும் இயற்கை சீற்றங் களால் ஏற்படும் திடீர் பாதிப்புகள் மற்றும் மகசூல் குறைவு ஆகிய

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

வற்றைக் கருத்தில் கொண்டும் விவசாயிகளுடைய கோரிக்கைகளை ஏற்றும் தமிழ்நாடு அரசு வேளாண்மை துறை மூலம் நிகழ் ஆண்டில் குறுவை நெல் பயிருக்கு பயிர் காப்பீடு செய்ய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இயற்கை இடர்பாடுகளான மழை மற்றும் அதிக வெப்பம் போன்றவைகள் தற்போது பயிரின் அறுவடை நேரங்களில் எதிர்பாராத பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. விவசாயிகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் அறிவிக்கப்பட்டுள்ள காரிப் குறுவை பயிரினை காப்பீடு செய்து விவசாயிகள் பயன் பெற கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மதுக்கூர் வேளாண்மை உதவி இயக்குனர் திலகவதி தன் செய்தி குறித்து தெரிவித்து உள்ளார். மேலும் தகவல் அறிய தங்கள் பகுதி வேளாண் உதவி அலுவலரை தொடர்பு கொள்ளவும்.



# சிறந்த உயிர்ம விவசாயிக்கான நம்மாழ்வார் விருது

மதுரை, ஜூலை 6

**விண்ணப்பம் செய்வதற்கான தகுதிகள்**

1. குறைந்தபட்சம் 1 ஏக்கர் பரப்பில் உயிர்ம வேளாண்மையில் சாகுபடி செய்தல் வேண்டும்.

2. முழு நேர உயிர்ம விவசாயியாக இருத்தல் வேண்டும்.

3. குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் உயிர்ம வேளாண்மையில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

4. உயிர்ம வேளாண்மைக்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

**பதிவு செய்தல்**

● நம்மாழ்வார் விருது பெற விரும்பும் விவசாயி அக்ரிஸ்நெட் வலைதளத்தில் 2024 செப்டம்பர் மாதம் 15–ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

● பதிவுக் கட்டணம் ரூ.100/– சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் அரசுக் கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்படும்.

**வெற்றியாளரைத் தேர்வு செய்வதற்கான மதிப்பீட்டுக் காரணிகள்**

i. உயிர்ம வேளாண்மையில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருக்க வேண்டும்.

ii. மண்ணில் உயிர்ம கரிமச் சத்து அளவு 1.5 சதவீதத்திற்கும் அதிகமாக இருத்தல் வேண்டும்.

iii செலவு ஆதாய விகிதம் குறைந்தபட்சம் 1:2 ஆக இருத்தல் வேண்டும்.

iv. உயிர்ம வேளாண்மையில் ஒரு ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்திருத்தல் வேண்டும்.

v. வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களை உயிர்ம வேளாண்மை முறையில் சாகுபடி செய்திருக்க வேண்டும்.

vi. ஒருங்கிணைந்த பண்ணைய முறையினைப் பின்பற்றி வேளாண்மையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

vii. விதைகள், எரு உற்பத்தி, இயற்கை இடுபொருள் உற்பத்தி ஆகியவற்றில் சுயசார்புடன் இருத்தல் வேண்டும்.

viii. உற்பத்தி செய்யப்பட்ட இயற்கை வேளாண் பொருட்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்து இலாபம் ஈட்டுபராக இருத்தல் வேண்டும்.

ix. பாரம்பரிய விதைகளைப் பயன்படுத்துவராக இருத்தல் வேண்டும்.

x. அதிக அளவு விவசாயிகளை உயிர்ம வேளாண்மையில் ஊக்கப்படுத்தி பின்பற்ற செய்திருத்தல் வேண்டும்.

மேற்கண்ட விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் உயிர்ம விவசாயிகள் தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை உரிய ஆவணங்களுடன் தொடர்பு கொள்ளு மாறு வேளாண்மை இணை இயக்குர் சுப்புராஜ் தெரிவிக்கிறார்.

## சணப்பு பயிரைத் தாக்கும் ஆந்திரக்னோஸ் நோய் தாக்குதலின் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை

**ஆந்திரக்னோஸ் :** இலைப்புள்ளியின் நடுப்பகுதி சாம்பல் நிறமாகவும், அதனைச்சுற்றி பழுப்பு நிற வளையமும் காணப் படும். இந்நோய் பயிரின் வேரைத் தவிர்த்து மற்ற எல்லா பாகங் களையும் தாக்கும். இளஞ்செடி விதையிலைகளில் கருஞ்சிவப்பு புள்ளிகள் தோன்றி நாளடைவில் காய்ந்து விடும். இலைகளில் செவ்வக வடிவில் பழுப்பு நிறத்தில் புள்ளிகள் தோன்றி பின் படர்ந்து இலைக் காம்புகளையும் தாக்கும். நோய் அதிகரித்தால் காய்களில் கருஞ்சிவப்பு புள்ளிகள் தோன்றும். நோய் தாக்கப் பட்ட விதைகள் நிறம் மாறி காணப்படும். இந்நோய் காற்றின் மூலமாக பரவுகிறது.

**மேலாண்மை :** நோயின் அறிகுறி தோன்றியவுடன் எக்டருக்கு மான்கோசெப் 1.0 கிலோ (அ) கார்பன்டாசிம் 250 கிராம் தேவை யான தண்ணீரில் கரைத்து தெளித்தல் வேண்டும். தேவை ஏற்படின் மீண்டும் ஒரு முறை 15 நாட்கள் இடைவெளியில் தெளித்தல் வேண்டும் என சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா தெரிவித்தார்.

# கிருஷ்ணகிரியில் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் உழவர் தின பேரணி



கிருஷ்ணகிரி, ஜூலை 6

கிருஷ்ணகிரி எல்.ஐ.சி., அலுவலகம் அருகில், தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில், நேற்று முன்தினம் மாநிலத் தலைவர் ராமகவுண்டர் தலைமையில், உழவர் தின பேரணியும், தொடர்ந்து பொதுக்கூட்டம் நடந்தது. தென்னிந்திய விவசாயிகள் சங்கத்தின் தலைவர் நரசிம்மநாயுடு, கர்நாடகா விவசாய சங்கத் தலைவர் குருபூர் சாந்தகுமார் ஆகியோர் பேசினர். கூட்டத்தில், தெலுங்கானா அரசு போல் ஏக்கருக்கு, ரூ.10,000/- வீதம் ஒவ்வொரு போகத்திற்கும் உற்பத்தி மானியம் பணமாக வழங்கி, காலேஸ்வரம் நீர் ஏற்று திட்டம் போல், ஒகேனக்கல் தண்ணீரை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர், சேலம், திருவண்ணாமலை மாவட்டங்களுக்கும் பெரிய மின்மோட்டார் மூலம் நீர் ஏற்றி வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு, மத்திய அரசு தேசிய வங்கி கடன்களையும், தமிழக அரசு கூட்டுறவு கடன்களையும் முழுவதும் தள்ளுபடி செய்ய வேண்டும். காட்டுப் பன்றியை சுட விவசாயிகளுக்கு துப்பாக்கியும், பயிற்சியும், அனுமதியும் வழங்க வேண்டும். அரசு செலவில் அனைத்து விவசாயப் பணிகளுக்கும் இயந்திரங்கள் வழங்க வேண்டும். வாணி ஒட்டு திட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். விவசாய விலைப் பொருட்களை இறக்குமதிக்கு தடைவிதித்து ஏற்றுமதிக்கு உண்டான தடையை நீக்கி, விவசாயிகள் லாபம் பெறும் வகையில், அனைத்து விவசாய பொருட்களையும், ஏற்றுமதி செய்ய வேண்டும். 100 நாள் வேலை திட்டத்தை விவசாயத்திற்கு மட்டும் முறையாக பயன்படுத்த வேண்டும். வனவிலங்குகளால் ஏற்படும் பயிர் சேதத்திற்கு ஏக்கருக்கு, ஒரு லட்சம் ரூபாய் இழப்பீடு, 15 நாட்களுக்குள் வழங்க வேண்டும். வன விலங்குகளால் ஏற்பட்ட உயிர் சேதத்திற்கு, 30 லட்சம் ரூபாய் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட, 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வெங்கடேசபுரம் கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழு குறித்த பயிற்சி

கிருஷ்ணகிரி, ஜுலை 6

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாரம், வேளாண்மை துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் (அட்மா) 2024-25ம் ஆண்டிற்கான வெங்கடேசபுரம் கிராமத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழு குறித்த பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் ஜான் லூர்து சேவியர் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் ஊராட்சி மன்ற தலைவர் ஸ்ரீகாந்த், உதவி தோட்டக்கலை அலுவலர் திருவேங்கடம், அதியமான் கல்லூரி முதல்வர் ஸ்ரீதரன், உதவி வேளாண்மை அலுவலர் முருகேசன், பட்டு வளர்ச்சித்துறை ஆய்வாளர் கல்யாண சுந்தரம் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உதவி இயக்குனர் கூறியதாவது, கிராம முன்னேற்ற குழுவின் நோக்கம் செயல்படும் விதம், திட்டங்கள் மற்றும் மானியங்கள் மக்களிடையே சேர்த்தல், சிறு தானியங்கள் மற்றும் பயறு வகைகளின் பயன்கள் அதனால் நமக்கு ஏற்படும் நன்மைகள் குறித்தும், இந்த ஆண்டு உலக சிறுதானிய ஆண்டாக கொண்டாடப்பட்டு வருகிறது என்றும் விவசாயிகள் சிறுதானியம் மற்றும் பயறு வகைகளை பயிரிட்டு மானியங்களை பெற்று கொள்ளலாம் என்று கூறினார். இதற்குண்டான விதைகள் மானிய விலையில் வேளாண் விரிவாக்க மையங்களில் கிடைக்கும் என்றும் விவசாயிகள் விதைப்பண்ணைகள் அமைத்து கூடுதல் இலாபம் அடையலாம் என்றும் கூறினார். கிராம வேளாண் முன்னேற்ற குழு சிறப்பாக செயல்பட்டு இயற்கை பண்ணையம் அமைத்து நோயற்ற வாழ்வும் இரட்டிப்பு இலாபம் அடையலாம். மேலும் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பதன் மூலம் குறைந்த செலவில் இரட்டிப்பு இலாபம் அடையலாம் என்று கூறினார். இதற்கு கிராம வேளாண் முன்னேற்ற குழுவானது சிறப்பாக செயல்பட்டு மற்ற விவசாயிகளுக்கு முன்னோடிகளாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் முருகேசன் நடப்பாண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் பண்ணை கருவிகள், தார்பாலின், பேட்டரி தெளிப்பான், ஜிப்சம், ஜிங்க்சல்பேட் மற்றும் தானியங்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படும் என்று கூறினார். ஊராட்சி மன்ற தலைவர் ஸ்ரீகாந்த் நம் வெங்கடேசபுரம் ஊராட்சிக்கு அரசு வழங்கிய கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மானியங்கள் மற்றும் இடுபொருட்கள் விவசாயிகள் வாங்கி பயன் அடைய வேண்டும் என்று கூறினார்.

அதியமான் கல்லூரி முதல்வர் ஸ்ரீதரன், கோடை உழவு செய்வதன் அவசியம் அதனால் ஏற்படும் பயன்கள் மண் மாதிரியின் பயன்கள் மற்றும் மண் மாதிரிகள் சேகரிக்கும் முறைகள் குறித்த செயல் விளக்கம் செய்து காண்பித்தார். மேலும் ஒருங்கிணைந்த பண்ணையம், இயற்கை பண்ணையம் குறித்து விளக்கி கூறினார். பட்டு வளர்ச்சித்துறை ஆய்வாளர் கல்யாண சுந்தரம், தமது துறைகள் சார்ந்த திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து விளக்கி கூறினார்கள். உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் கா.ம. முஹம்மது ரஃபி மற்றும் பி.பழனிச் சாமி ஆகியோர் சொட்டுநீர் பாசனத்தின் பயன்கள் அரசு வழங்கும் மானியங்கள் குறித்து விளக்கி கூறினார். உழவன் செயலியின் பயன்கள் மற்றும் உழவன் செயலி விவசாயி களுக்கு பதிவிறக்கம் செய்தும் உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரங்களின் பயன்கள் குறித்தும் விளக்கி கூறினார்கள்.

உதவி தோட்டக்கலை அலுவலர் திருவேங்கடம் தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானியங்கள் இலவசமாக வழங்கப்படும் நாற்றுகள், மல்ச்சிங் ஷீட், நீர் சேமிப்பு தொட்டி, 5 வகையான பழ செடி தொகுப்பு மானிய விலையில் கிடைக்கும் என்று கூறினார். இப்பயிற்சியில் சொட்டு நீர் பாசன நிறுவனத்தார் கலந்து கொண்டனர். மலும் பாரம்பரிய நெல் இரகங்கள் மற்றும் சிறு தானியங்கள் கண்காட்சி இடம் பெற்றிருந்தது.

இப்பயிற்சிக்காண ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கா.ம.முஹம்மது ரஃபி மற்றும் பி.பழனிச்சாமி ஆகியோர் செய்திருந்தனர்.

# நிலக்கடலை விஆர்ஐ 10 சிறப்பியல்புகள்

**நிலக்கடலை வகை VRI 10**

**பெற்றோர் :** VRI 2 மற்றும் NRCG CS 349.

**வயது :** 90-95 நாட்களில் முதிர்ச்சியடையும்.

**பருவம் :** காரீப் மற்றும் ரபி பருவங்களில் சாகுபடிக்கு ஏற்றது.

**மகசூல் :** காரீப் பருவத்தில் ஹெக்டேருக்கு 2535 கிலோ மகசூல்

**மகசூல் அதிகரிப்பு :** நிலக்கடலை வகைகளான TMV 14 மற்றும் GG 7 ஐ விட 10.8 மற்றும் 26.0% ஆகும். ராபி பருவத்தில், VRI 10 ஒட்டு மொத்த சராசரி மகசூல் ஹெக்டருக்கு 2448 கிலோவாக பதிவு செய்யப்பட்டது. இது முறையே TMV 14 மற்றும் GG 7 ஐ விட 16.2 மற்றும் 22.0% மகசூல் அதிகரித்துள்ளது. 100 விதைகளின் எடை 47-55 கிராம், எண்ணெய் சத்து-46-48% ஆகும்.




இந்த இரகம் மானாவாரி (சித்திரைப்பட்டம், ஆடிப்பட்டம், ஐப்பசிப்பட்டம்) மற்றும் மானாவாரி (மார்கழிப்பட்டம் மற்றும் மாசிப்பட்டம்) சாகுபடிக்கு ஏற்றது.

VRI 10 வகை, பின்பருவ இலைப்புள்ளி, துரு நோய். சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் இலைகளை உண்ணும் பூச்சிகளுக்கு மிதமான எதிர்ப்பைக் கொண்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் முன்பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வேளாண்மை உதவி இயக்குநர் வேலு தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# அயோத்தியாப்பட்டணம் வட்டாரத்தில் அங்கக வேளாண்மையில் பிரம்மாஸ்திரா

அங்கக வேளாண்மையில் பிரம்மாஸ்திரா பூச்சி கட்டுப்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**பிரம்மாஸ்திரா தயாரிக்க தேவையான பொருட்கள்**

1) வேப்பிலை – 3 கிலோ
2) புங்க இலை – 2 கிலோ (அல்லது) சீத்தாப்பழ மர இலைகள் – 2 கிலோ
3) ஊமத்தை இலை – 2 கிலோ
4) மாட்டு கோமியம் – 10 லிட்டர்
5) தண்ணீர் – 250 லிட்டர்

மேற்கண்ட இலைகளை இடித்து அதனை 10 லிட்டர் மாட்டுக் கோமியத்துடன் கலந்து கொதிக்க வைக்க வேண்டும். (20 முதல் 25 நிமிடங்கள்) இதிலிருந்து பெறப்படும் வடிநீரை 5-6 லிட்டர் எடுத்து அதனை 250 லிட்டர் தண்ணீருடன் கலந்து நீர்க்க செய்து, ஒரு ஹெக்டருக்கு தெளிக்கலாம். இவ்வாறு தெளிப்பதால் சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் புழுக்களின் இளம் பருவங்களைக் கட்டுப்படுத்தலாம். அனைத்து பயிர்களுக்கும் உகந்தது என அயோத்தியாப்பட்டணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் த.சரஸ்வதி கேட்டுக்கொண்டுள்ளார்.



# இன்று உலக உணவுப் பாதுகாப்பு நாள்




ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 7ஆம் தேதி 'உலக உணவுப் பாதுகாப்பு நாள்' என கொண்டாடப்பட்டு வருகிறது. அசுத்தமான உணவு மற்றும் பாதுகாப்பற்ற குடிநீரால் ஏற்படும் ஆபத்து குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த இந்த நாள் ஐ.நா. சபையால் 5 ஆண்டுகளுக்கு முன்னதாக உருவாக்கப் பட்டது. அதாவது ஐ.நா சபையில் 2018யில் நெதர்லாந்து கொண்டு வந்த இந்த உணவு பாதுகாப்பு தின தீர்மானத்தை 44 நாடுகள் ஆதரித்தன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நாளை (WORLD FOOD SAFETY DAY) உலகெங்கும் அனுசரிக்கப்படுகிறது.

**இதனுடைய நோக்கம்?**

சுகாதாரமற்ற உணவால் நோய் வாய்ப்படுவதை, தடுப்பது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் முக்கிய குறிக்கோளாகும்.

**இந்த ஆண்டின் கருப்பொருள் (THEMES)**

உணவுப் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றுவதே, உயிர்களை காப்பாற்ற உதவும் என்பது தான் இந்த ஆண்டின் கருப் பொருளாகும்.

**இந்த நாள் உருவாக எது காரணமாக இருந்தது?**

உலகில் 10 பேரில் 1 நபர் அசுத்தமான உணவால் நோய் வாய்ப்பட்டிருப்பதாக உலக சுகாதார நிறுவனம் (நிக்ஷிநு) தெரிவிக்கிறது. அதாவது ஆண்டுதோறும் 60 கோடி மக்கள் இதனால் பாதிக்கப்படுகின்றனர். அதுவும் குறிப்பாக 5 வயதுடைய பச்சிளங்குழந்தைகள் 40% பாதிக்கப்பட்டு இருப்ப தாக தரவுகள் கூறுகின்றன. முழுமையான மக்களுக்கு தரமான உணவு பாதுகாப்பு (FOOD SECURITY) தேவை என்பதை உறுதிப்படுத்திடவே இந்த நாள் உருவாக்கிட பட்டுள்ளது.

## தரமற்ற உணவால் என்ன பாதிப்பு தெரியுமா?

ஒவ்வொரு ஆண்டும் 4,20,000 பேர் தரமற்ற, பாதுகாப்பற்ற அசுத்தமான உணவை உண்டு பல கொடிய நோய்களுக்கு ஆளாகி உயிரிழக்கின்றனர். கிருமிகள், ரசாயனங்கள் கலந்த மோசமான உணவை உண்பதால், 200க்கு மேற்பட்ட நோய்கள் ஏற்படக்கூடும். கொடிய புற்றுநோயும் இதனால் வர வாய்ப்புள்ளது.

சமீபகாலமாக பஞ்சுமிட்டாய், பானிப்பூரி போன்ற உணவு வகைகளையும் சில மாநில அரசுகள் தடை விதித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தெருவோர கடையில் வடை சுடும் எண்ணெயால் ஏற்படும் பாதிப்பை மக்களை உணர்ந்து, அதனை உணவு பாதுகாப்பு துறை மறுபடியும் அந்த எண்ணெய்யை வாங்கிக் கொள்ள முடிவு செய்துள்ளது வரவேற்கதக்கது. இன்று உலகின் 5வது மிகப்பெரிய பொருளாதார சக்தியாக நாம் உயர்ந்துள்ள போதிலும் இந்தியாவில் 71% நபர்களுக்கு போதிய ஊட்டசத்துகள் கிடைப்பதில்லை என்பது தான் நிதர்சனமான உண்மையாகும்.

இன்றைய இளைய தலைமுறைகள் பண்டைய கால உணவு பழக்கங்களிலிருந்து மாறுபாட்டு மேலை நாட்டு கலாச்சார உணவுகளை (பீட்சா, பர்கர், பிரைட் ரைஸ்) போன்றவற்றை அதிகமாக உட்கொள்ளுவதால் இளம் வயதிலே பல்வேறு நோய்களுக்கு ஆளாகி வருவதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். துரித உணவு வகைகளில் (FAST FOOD) களில் அதிகமான உப்பும், காரமும் தான் உள்ளது. இதை உட்கொள்ளுவதால் நடுத்தர வயதிலே பலர் உடல் ரீதியான பிரச்சனைகளால் அல்லாடுகின்றனர். இதை தவிர்க்க சுத்தமான எளிதில் ஜீரணிக்க கூடிய உணவு களை எடுக்க வேண்டும். எனவே நம்முடைய முன்னோர்கள் அன்றே சொல்லி வைத்தனர் ‘உணவே மருந்து மருந்தே உணவே‘ என்றனர்.

ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பாக, உட் கொள்ளப்படும் உணவுகளை சமூகம் ஆரோக்கியமானதாக இருந்தால் மருத்துவ செலவுகள் கணிசமாக குறையும் என (WHO) தெரிவித்துள்ளது.

எனவே இந்த நாளை நாம் உணவினால் ஏற்படும் அபாயங்களை கண்டறியவும், அவற்றை நிர்வாகிக்கவும் நடவடிக்கை எடுப்பதே முக்கிய நோக்கமாக கடைபிடிப்போம் என உறுதி மொழி எடுத்துக்கொள்ளுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பருத்தி காயமுகல் நோய் – ஓர் பார்வை

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரத்தில் கோடைக்கால இறவை பருத்தி சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. தற்பொழுது தொடர் மழை பெய்து கொண்டு இருப்பதால் பருத்தி காயமுகல் வர வாய்ப்பு உள்ளது.

### நோய்க்கு சாதகமான சூழ்நிலை

- பூக்கள் மற்றும் காய்கள் உருவாகும் நேரத்தில் அதிக மழைப் பொழிவு.
- பூச்சிகளால் உண்டாகும் காயங்கள்.
- நெருக்கமான இடைவெளி.
- பரிந்துரைக்கு அதிகமாக தழைச்சத்து உபயோகம்.




### அறிகுறிகள்

- காய் முழுவதும் கருப்பு (அ) பழுப்பு நிற புள்ளிகள் காணப்படும்.
- அழுகல், வெளியிலோ (அ) உட்பகுதியிலோ காணப்படும்.
- காய், வெடிக்காமல், இளம்பருவத்திலேயே உதிர்ந்துவிடும்.

### மேலாண்மை

- போதுமான பயிர் இடைவெளி விடவும்.
- பரிந்துரைக்கப்பட்ட உர அளவை பயன்படுத்தவும்.
- கார்பெண்டாசிம் (50% WP) 200 கிராம் (அ) மான்கோசெப் (75% WP) 800 கிராம் (அ) காப்பர் ஆக்ஸி குளோரைடு 1 கிலோ /ஏக்கர், 45 ம் நாள் முதல் 15 நாட்களுக்கு ஒருமுறை தெளித்து பயன் பெறலாம் என்று வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் இரா.கிரிஜா கூறியுள்ளார்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN Jain Irrigation Systems Ltd. Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# குறைந்த செலவில் கம்பு சாகுபடி



கம்பானது சத்துகள் மிகுந்த சிறுதானிய பயிராகும். இது தானியம் மற்றும் தட்டைக்காக அதிகளவில் பயிரிடப்படுகிறது. பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் நீரப் பற்றாக்குறை மற்றும் உயர் வெப்பத்தைத் தாங்கி வளரும் பயிர்களில் கம்பும் ஒன்றாகும். இது தமிழ்நாட்டில் நெல் சோளம் மற்றும் கேழ்வரகு சாகுபடிக்கு அடுத்த இடத்தில் உள்ளது. நீர்வளமும் மண்வளமும் குறைந்த இடங்களிலும் செழித்து வளரும். மற்ற தானியங்களை விடச் சிறுதானியங்கள் அதிக ஆற்றல் மிக்கவை. புரதம் மற்றும் தாதுப்புகள் சிறு தானியங்களில் அதிகமாக உள்ளன. மேலும் அமினோ அமிலம், நார்சத்து, கால்சியம், இரும்பு மற்றும் வைட்டமின்கள் மிகுதியாக உள்ளன. கம்பிலும் புரதம் அமினோ அமிலங்கள் அதிகமாக உள்ளன. போதியளவு மாவுச்சத்தும் அதிக ருசியைக் கொடுக்கும் கொழுப்பும் வைட்டமின்களும் தாது உப்புகளும் கம்பில் நிறைந்துள்ளன.

**கம்பு இரகங்கள்**

**கோ 10 :** இதில் 12.7% புரதம் இருக்கும். அடிச்சாம்பல் நோயை எதிர்த்து வளரும். மணிகள் நெருக்கமாகவும் திரட்சியாகவும் இருக்கும். இறவையில் எக்டருக்கு 3,526 கிலோ மானாவாரியில் 2,923 கிலோ மகசூலைத் தரும்.

**கோ (சியு) 9 :** கதிர் 45-50 செ.மீ நீளமிருக்கும். 13.68% புரதம் இருக்கும் அடிச்சாம்பல் நோயை எதிர்த்து வளரும். மணிகள் அடர்த்தியாக இருக்கும் இறவையில் எக்டருக்கு 2,865 கிலோ மனாவாரியில் 1,950 கிலோ மகசூலைத் தரும். 80-85 நாட்களில் முதிரும். ஆடிப்பட்டம், புரட்டாசிப் பட்டம் இறவையில் மாசிப் பட்டம் மற்றும் சித்திரைப் பட்டத்தில் பயிரிடலாம்.

**கோ 9 :** வீரிய ஒட்டு இரகம்: 75-80 நாட்களில் அறுவடைக்கு வரும். இரும்புச்சத்து நிறைந்தது. அடிச்சாம்பல் மற்றும் துரு நோயைத் தாங்கி வளரும். மணிகள் நெருக்கமாக பெரிதாக இருக்கும். இறவையில் எக்டருக்கு 3,728 கிலோ மானாவாரியில் 2,707 கிலோ மகசூல் கிடைக்கும். ஆடிப் பட்டம், புரட்டாசிப் பட்டம் இறவையில் மாசிப் பட்டம் மற்றும் சித்திரைப் பட்டத்தில் பயிரிடலாம்.

**கோடையுழவு**

கோடை மழையைப் பயன்படுத்தி நிலத்தை சட்டிக் கலப்பை யால் ஆழமாக உழ வேண்டும். பிறகு இருமுறை இயந்திரக் கலப்பையால் உழ வேண்டும் கோடையுழவு மூலம் மண்ணரிப்பைத் தடுக்கலாம் மழை நீரைச் சேமிக்கலாம். களைகள் பூச்சிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

**நிலம் தயாரித்தல்**

நாட்டுக் கலப்பை அல்லது இரும்புக் கலப்பையால் நிலத்தை ஆழமாக உழ வேண்டும். பிறகு புழுதி புரள 2-3 முறை உழுது நிலத்தை விதைப்புக்குத் தயாரிக்க வேண்டும். கடைசி உழவுக்கு முன் எக்டருக்கு 12.5 டன் மட்கிய தொழுவுரம் வீதம் சீராக இட வேண்டும்.

**பருவம் மற்றும் இரகம்**

சித்திரைப் பட்டம் (மார்ச் – ஏப்ரல்)

**இறவை**

மாசிப்பட்டம் (ஜனவரி – பிப்ரவரி), ஆடிப்பட்டம் (ஜுன் – ஜுலை)

**மானாவாரி**

புரட்டாசிப் பட்டம் (செப்டம்பர் – அக்டோபர்)

**இறவை நாற்றங்கால் தயாரித்தில்**

ஓர் எக்டர் நடவுக்கு 300 ச.மீ பரப்புள்ள 7.5 சென்ட் நாற்றங் கால் தேவை. இதில் 3x1.5 மீட்டர் நீள அகலத்தில் மேட்டு பாத்தி களை அமைக்க வேண்டும். பிறகு ஓர் எக்டருக்குத் தேவையான 3.75 கிலோ விதைகளை ஒரு செ.மீ ஆழத்தில் விரலால் கோடு களைக் கிழித்து விதைகளைச் சீராக விதைக்க வேண்டும். குருத்து ஈக்கள் தொற்றும் பகுதியில் எக்டருக்கு 12.5 கிலோ விதைகள் தேவைப்படும். விதைத்ததும் மட்கிய 50 கிலோ தொழு உரத்தால் விதைகளை மூடிவிட்டுப் பூவாளியால் நீரை லேசாகத் தெளிக்க வேண்டும். அடுத்து மண்ணின் ஈரப் பதத்துக்கு ஏற்ப நீரைத் தெளித்து வர வேண்டும். வாய்க்கால் களை அமைத்தும் அந்த வாய்க்கால்கள் மட்டும் நனையும்படி நீரைப் பாய்ச்சலாம்.

**விதை நேர்த்தி**

விதைப்பு முறையைப் பொறுத்து விதையளவு மாறுபடும்.

விதைகளை 2% பொட்டாசியம் குளோரைடு அல்லது 3% சோடியம் குளோரைடு கரைசலில் ஆறு மணி நேரம் ஊற வைத்து எடுத்து ஐந்து மணி நேரம் நிழலில் உலர்த்த வேண்டு;ம் இப்படிச் செய்தால் பயிர்கள் வறட்சியைத் தாங்கி வளர்ந்து நல்ல மகசூலைக் கொடுக்கும் விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுபடுத்த ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டாசிம் அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் வீதம் கலக்க வேண்டும்.

**விதைப்பு**

வரிசைக்கு வரிசை 45 செ.மீ செடிக்கு செடி 15 செ.மீ இடைவெளியில் விதைக்க வேண்டும்.

**உர அளவு**

மண் பரிசோதனை செய்யாத நிலையில் அட்டவணையில் உள்ளபடி உரங்களை இட வேண்டும்.

| பயரிடும் முறை | தழைச்சத்து (கி) | மணிச்சத்து | சாம்பல்சத்து |
|---|---|---|---|
| மானாவாரி | 70 | 35 | 35 |
| இறவை | 80 | 40 | 40 |

**நுண்ணூட்டம்**

எக்டருக்கு 12.5 கிலோ நுண்ணுரம் வீதம் எடுத்து 37.5 கிலோ மணலில் கலந்து கடைசி உழவுக்கு முன் சாலில் சீராக இட வேண்டும் மண்ணில் கலந்து இடக்கூடாது.

**பயிர் இடைவெளி மற்றும் களை நிர்வாகம்**

கம்பை விதைத்த இரண்டான வாரத்தில் களையெடுக்கும் போது பயிருக்குப் பயிர் 15 செமீ இடைவெளி இருக்குமாறு பயிர்களைக் கலைத்து விட வேண்டும். விதைத்த 15 மற்றும் 30 நாளில் களையெடுக்க வேண்டும்.

**அறுவடை**

இலைகள் மஞ்சளாக மாறிக் காய்ந்ததைப் போல இருக்கும் தானியங்கள் கடினமாக இருக்கும் இந்த நேரத்தில் கதிர்களை மட்டும் அறுவடை செய்ய வேண்டும். தட்டையை ஒரு வாரம் கழித்து அறுத்து நன்கு காய வைத்துச் சேமிக்க வேண்டும்.

தகவல் : **ம.மகாலெட்சுமி, விதைப் பரிசோதனை அலுவலர், அ.லயோலா அன்புக்கரசி, ம.சரஸ்வதி, வேளாண்மை அலுவலர்கள், விதைப் பரிசோதனை நிலையம், சிவகங்கை.**


IFFCO
Wholly owned by Cooperatives
இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம்
IFFCO
Wholly owned by Cooperatives
பயிர்களில் ஊட்டச்சத்தின் அளவை அதிகரிக்கிறது
உரச்செலவை குறைக்கிறது
சுற்றுச்சூழலுக்கு உகந்தது
பயிரின் தரம் மற்றும் மகசூலை அதிகரிக்கிறது
குருணை உரங்களை விட விலை குறைவு
விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கிறது
IFFCO
पूर्णतः सहकारी स्वामित्व
Wholly owned by Cooperatives
NANO
DAP
Nano Di Ammonium Phosphate
LIQUID (8:16:0)
CROP NUTRITION REDEFINED
Seed Primer | Growth Enhancer | Yield Booster
NANO FERTILISER
FCO Approved
Less Cost, More Profits
Suitable for all Crops
500 ml
விலை ரூ.600/-

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்
# காளான் மற்றும் முருங்கையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோவை, ஜூலை 7

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காளான் மற்றும் முருங்கையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 9 மற்றும் 10.7.24 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலை சாலை வழி), அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூரில் நடைபெறும். கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

● **முருங்கை**

முருங்கை பொடி, பருப்பு பொடி, சாம்பார் பொடி, பிஸ்கட், அடை மிக்ஸ், ஊறுகாய், நூடுல்ஸ், சூப் மிக்ஸ்

● **காளான்**

காளான் பொடி, சூப் மிக்ஸ், பிஸ்கட், ஊறுகாய், பிரியாணி மிக்ஸ், பிழிதல் தொழில் நுட்பம்

● தொழில் தொடங்குவதற்கான உரிமம் பெற்றுக் கொள்வதற்குரிய வழிமுறைகள்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# கிராம வேளாண் முன்னேற்றக்குழு கூட்டம்

சேலம், ஜூலை 6

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரத்தில் இந்தாண்டு கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டம் கடத்தூர் அக்ரஹாரம், புத்தூர் அக்ரஹாரம், சேனைப் பாளையம், அக்கரைபாளையம் மற்றும் உத்தமசோழபுரம் ஆகிய கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழக வேளாண் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கையின் படி மேற்கண்ட கிராமங்களில் கிராம வேளாண் முன்னேற்ற குழுக்கள் ஏற்படுத்தி அட்மா திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது.




அதைத்தொடர்ந்து கடத்தூர் அக்ரஹாரம் கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழுக் கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் இரா.கிரிஜா தலைமை தாங்கி வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்களில் குறைந்த பட்சம் 80 சதம் மேற்கண்ட கிராமத்தில் செயல்படுத்தப்பட்டு தன்னிறைவு அடையச் செய்வது இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் என்று கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் பி.கிருஷ்ணமூர்த்தி, காரிப் பருவ பயிர்களின் சாகுபடி தொழில்நுட்பங்களை பற்றி எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் ஆ.குமார், கால்நடை உதவி மருத்துவர் எஸ்.பிரதீபா, வேளாண் பொறியியல்துறை இளநிலை பொறியாளர் எல்.சரவணன், தோட்டக்கலை உதவி அலுவலர் என்.சதீஷ் குமார், பட்டு வளர்ச்சி துறை உதவி ஆய்வாளர் எம்,ராமசாமி ஆகியோர் தமது துறை சார்ந்த மானிய திட்டங்களை எடுத்து கூறினார். அட்மா திட்ட அலுவலர்கள் கே.ராஜேந்திரன், சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அறந்தாங்கி வட்டாரம் நாட்டுமங்களம் கிராமத்தில் நுண்ணீர் பாசனம் குறித்த விவசாயிகள் பயிற்சி



புதுக்கோட்டை, ஜுலை 6

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரம், நாட்டு மங்கலம் கிராமத்தில் 40 முன்னோடி விவசாயி களுக்கு நுண்ணீர் பாசனம் குறித்த ஒரு நாள் பயிற்சி வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.




பயிற்சியில் பினோலெக்ஸ் நிறுவனத்தின் அதிகாரி ஸ்ரீராம் விவசாயிகளுக்கு தெளிப்பு நீர் பாசனம் சொட்டு நீர் பாசனம் முறைகள் அதனுடைய பயன்பாடு அதை பயன்படுத்தும் விதம் பயிர்களுக்கு ஏற்ற நுண்ணீர் பாசன முறைகள் பற்றி எடுத்துக் கூறினார். மேலும் நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கு அரசு மானிய திட்டங்களை பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

பயிற்சியில் கலந்து கொண்ட வேளாண்மை உதவி இயக்குனர் அறந்தாங்கி சுப.பத்மபிரியா, வேளாண் பயிர்கள் சார்ந்து தொழில் நுட்பங்களையும் நெற்பயிரில் விதை நேர்த்தி நுண்ணுயிர் உரங்கள் பயன்பாடு பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். வேளாண் துறை சார்ந்த அரசு திட்டங்களை மக்களுக்கு எடுத்துரைத்தார். பயிற்சியில் விவசாயிகள் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் பயிர் காப்பீடு பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். பயிற்சியில் கலந்து கொண்ட முன்னோடி விவசாயிகள் உடைய சந்தேகங்களுக்கு முறையான பதில்கள் கொடுக்கப்பட்டது. பயிற்சியினை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சரவணன் மற்றும் வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆனந்த ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நுண்ணுயிரிகளால் செறிவூட்டப்பட்ட மக்கிய உரம்!

ஒரு டன் மக்கிய உரத்தை நிழலில், கடினமான தரையில் குவிக்க வேண்டும். ஒரு டன் மக்கிய உரத்திற்கு நன்மை தரக்கூடிய நுண்ணுயிரிகளான அசோஸ்பைரில்லம் (2 லிட்டர்) சூடோமோனாஸ் (2 கிலோ). பாஸ்போபாக்டீரியா (2 லிட்டர்) மற்றும் ராக்பாஸ்பேட் (20 கிலோ (2 சதவிகிதம்). பொட்டாஷ் பாக்டீரியா (2 லிட்டர்), மற்றும் துத்தநாகபாக்டீரியா (2 லிட்டர்) ஆகியவற்றை கலக்க வேண்டும்.

கலக்கப்பட்ட நுண்ணுயிரிகளின் அதிகபட்ச வளர்ச்சியை ஊக்குவிக்க, 40 சதவிகிதம் ஈரப்பதத்தை நிலை நிறுத்த வேண்டும். மக்கிய உரத்தில் இடப்பட்ட நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க, 20 நாட்கள் அப்படியே வைத்திருக்க வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட உரமானது, நுண்ணுயிரிகளால் செறிவூட்டப்பட்ட மக்கிய உரம் எனப்படும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட மக்கிய உரமானது, சாதாரண மக்கிய உரத்தைவிட ஊட்டச்சத்து மற்றும் நன்மை செய்யக்கூடிய நுண்ணுயிரிகள் அளவு அதிகமாக இருப்பதுடன் தாவரத்தின் வளர்ச்சியை தூண்டுவதற்கும் உதவுகிறது.

**மக்கிய உரத்தின் பயன்கள்**

தாவர மற்றும் கால்நடைகளின் கழிவுகளில் இருந்து தயாரிக்கப்பட்ட உயர்தர மற்றும் செறிவூட்டப்பட்ட உரமானது பண்ணையிலேயே கிடைக்கிறது.

மக்கிய உரத்தை கலப்பதன் மூலம் மண்ணின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்புகள் மேம்படுகிறது.

தாவரக் கழிவுகள் மண்ணின் தரத்தை மேம்படுத்துவதால் விளை பொருட்களின் தரம் உயர்கிறது என சேலம் மாவட்டம் காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ஹனீஷா தெரிவித்தார்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

# பயறுவகை பயிர்களில் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தி பயிர் உற்பத்தியை பெருக்கும் தொழில்நுட்ப பயிற்சி



சேலம், ஜுலை 6

சேலம் மாவட்டம், எஸ்.ஆண்டிபட்டி கிராமத்தில் 5.7.24 அன்று வேளாண்மை துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் மூலம் பயறுவகை பயிர்களில் சான்று பெற்ற விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை பயன்படுத்தி பயிர் உற்பத்தியை பெருக்கும் தொழில்நுட்பங்கள் பற்றிய விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு சண்முகப்பிரியா, வட்டார தொழில்நுட்பக் குழு அமைப்பாளர்- வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை / வேளாண்மை உதவி இயக்குநர், சேலம் தலைமை தாங்கினார். முருகன், சேலம் ஒன்றிய குழு கவுன்சிலர் எஸ்.ஆண்டிப்பட்டி முன்னிலை வகித்தார்.

சரவணன், விதைச்சான்று அலுவலர் சேலம், சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும் எனவும் விதை தேர்வு, விதை முளைப்புத்திறன், பயிர் விலகு தூரம், கலவன்களை நீக்குதல், பயிரின் இனத்தூய்மை, புறத்தூய்மை கடைபிடித்தல் மற்றும் விதைப்பண்ணை அமைத்தல் பற்றியும் விவசாயிகளுடன் கலந்துரையாடினார். அசோக் வேளாண்மை அலுவலர், உயிர் உரங்கள் உற்பத்தி மையம், சேலம், உயிர் உரங்களின் முக்கியத் துவம் பற்றியும் உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் மற்றும் இரசாயன விதை நேர்த்தி முறைகள் பற்றி செயல்முறை விளக்கம் செய்து காண்பித்தார். கந்தசாமி, வட்டார தொழில்நுட்ப மேலாளர், சேலம், பயிர் சார்ந்த தொழில்நுட்பங்களை தெரிவித்து விவசாயிகளுடன் கலந்துரையாடினார். ரேவதி, கால்நடை உதவி மருத்துவர், கால்நடை பராமரிப்பு துறையில் உள்ள திட்டங்கள் மானியங்கள் பற்றி விவசாயிகளுக்கு தெரிவித்தார். சந்திரசேகர், வேளாண்மை அலுவலர், சேலம், வனத்துறையில் வழங்கப்படும் மரக்கன்றுகள் பற்றி விவசாயி களுக்கு தெரிவித்தார். ஹரி மந்தி, ஆய்வாளர், உத்தமசோழபுரம், ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகளுக்கு உள்ள வாய்ப்புகள் பற்றி தெரிவித்தார். சந்தோஷ், உதவி வேளாண்மை அலுவலர், திருமலைகிரி, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டம் பற்றி விவசாயிகளுக்கு தெரிவித்தார். ஜெல்லி ராஜ்குமார், உதவி தொழில்நுட்ப மேலாளர், சேலம், பூஞ்சான விதைநேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.

# ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் சமச்சீர் உரப்பயன்பாடு குறித்த பயிற்சி

மதுரை, ஜூலை 6

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் முள்ளிப்பள்ளம் கிராமத்தில் முதலைமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் சமச்சீர் உரப்பயன்பாடு குறித்த மாவட்ட அளவிலான பயிற்சி நடைபெற்றது.

வேளாண்மை துணை இயக்குநர் அமுதன் (மத்திய திட்டம்) தலைமை தாங்கினார். முதலைமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை பற்றி விளக்கினார். வேளாண்மை துணை இயக்குநர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ராணி பிரதம மந்திரி கௌரவ நிதி திட்டம் பற்றி விளக்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டி கூறுகையில், வேளாண்மைத்துறையில் செயல் படுத்தப்படும் மத்திய மற்றும் மாநில திட்டங்கள் மற்றும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானிய திட்டங்களில் பற்றி எடுத்து விளக்கினார். மேலும் வேளாண்மை அலுவலர் முத்துலெட்சுமி கலந்து கொண்டு சமச்சீர் உரப்பயன்பாட்டின் முக்கியதுவம் பற்றி விளக்கினார். மேலும் உரக்கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் பானுமதி கலந்துகொண்டு உரம் பயன்படுத்தும் முறைகள் பசுந்தாள் இலைகளை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி விளக்கினார். மேலும் நடமாடும் மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் சோபனா மற்றும் ஜோஸ்பின் நிர்மலா கூறுகையில் மண்மாதிரி எடுத்தல் அதன் பயன்பாடுகள் மற்றும் பயிருக்கு ஏற்ற உரமிடுதல் பற்றி விளக்கினார்கள். வேளாண்மை அலுவலர் சத்தியவாணி கூறுகையில் வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட்கள் மற்றும் உயிர் உரங்கள் இருப்பு மற்றும் பயன்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கினார். துணை வேளாண்மை அலுவலர் பெருமாள் நன்றி கூறினார். தக்கைப்பூண்டு செயல் விளக்கத்திடல் உதவி வேளாண்மை அலுவலர் விக்டோரியா மற்றும் தங்கையா செய்திருந்தனார். மேலும் இப்பயிற்சிகான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் பிரியா மற்றும் உதவி தொழில் நுட்ப மேலாளர் பூமிநாதன், அருணாதேவி சிறந்த முறையில் செய்திருந்தனர்.